செ.வெ.எண்: 652/2016 நாள்: 20.09.2016

**<u>கால்நடை பராமரிப்புதுறை</u>**

# <u>பத்திரிகை செய்தி</u>

## <u>போலி கால்நடை மருத்துவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை</u>

கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் போலி கால்நடை மருத்துவர்கள் மீது கடும் நடிவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு.சஜ்ஜன்சிங் ரா சவான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

### போலி கால்நடை மருத்துவர்

கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ பேரவை என்றழைக்கப்படும் வெட்னரி கவுன்சிலில் பதிவு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மட்டுமே சிகிச்சை அளிக்க அங்கீகரிக்கப்பட்டவர்கள். இதனை மீறி போலி மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதும், அவர்களிடம் கால்நடைகளுக்கு சிகிச்சை பெறுவதும் முற்றிலும் தவறான செயலாகும். போலி நபர்களிடம் கால்நடைகளுக்கு சிகிச்சை பெறுவதால் ஏற்படும் குறைபாடுகளுக்கும், இழப்புகளுக்கும் இன்சூரன்ஸ் நிறுவனங்கள் இழப்பீடு வழங்காது. இதனால் ஏழை எளிய விவசாயிகளும் கால்நடை வளர்ப்போரும் பொருளாதார ரீதியில் பாதிப்புக்கு உள்ளாவார்கள்.

மேலும், மாவட்டத்தில் சில இடங்களில் சினைஊசி போடுவதற்கு பயிற்சி பெற்ற செயற்கைமுறை கருவூட்டல் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் மாடுகளுக்கு சினைஊசி போடுவதற்கு மட்டுமே 3 மாத காலம் பயிற்சி பெற்றவர்கள். இவர்களுக்கு கால்நடைகளுக்கான நோய்கள் மற்றும் சிகிச்சை முறைகள் மற்றும் மருந்துகள் குறித்து பயிற்சி எதுவும் கிடையாது என்பதால் அவர்கள் கருவூட்டல் பணி மட்டும் தான் செய்ய வேண்டும். மாநிலத்தில் பிற இடங்களில் இவர்கள் கால்நடைகளுக்கு தவறுதலாக சிகிச்சை அளித்து தண்டிக்கப்பட்டதாக தகவல்கள் பெறப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட கால்நடை மருத்துவ பேரவை பதிவு பெற்ற கால்நடை மருத்துவர்களையே பொதுமக்கள் நாட வேண்டும்.

இது போன்ற தவறான செயல்களில் ஈடுபடுபவர்கள் முதல் முறையாக கண்டுபிடிக்கப்படும்போது ஆயிரம் ரூபாய் அபராதமும், இரண்டாவது முறையாக கண்டுபடிக்கப்பட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் அல்லது 6 மாத கடுங்காவல் தண்டனையோ அல்லது இரண்டும் சேர்த்தோ வழங்கப்படும். போலி மருத்துவர்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பான புகார்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மண்டல இணை இயக்குநர் (கூ.பொ),**
**கால்நடை பராமரிப்புத் துறை,**
**கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**நாகர்கோவில்.**

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.